ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இல்லை என்று சொல்லாமல் அந்த அரசு உதவி பெறும் மேல் நிலைப் பள்ளிக்கு ஒரு பிற்பட்டோர் நல விடுதியை அமைத்துத் தர ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தென்னூருக்கு விருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் ஆண்டிமடத்திலே பிற்படுத்தப்பட்டவர் நலத்துறையின் சார்பில் ஒரு விடுதி இயங்கிக் கொண்டிருக்கிறது, ஹரிஜன நலத்துறையின் சார்பிலே ஒரு விடுதி இயங்கிக்கொண்டிருக்கிறது, ஆகவே தற்போதைய சூழ்நிலையில் புதிய விடுதிகள் திறப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 262. திரு, அ, பாப்பா சுந்தரம். மாண்புமிகு கல்வி அமைச்சர்,

262—

மணப்பாறையில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,

*324 திரு, அ, பாப்பா சுந்தரம்:
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மணப்பாறை நகராட்சியில் அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி துவங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை என்பது ஒரு நகராட்சிப் பகுதியாகும் அது ஒரு தாலுக்காவினுடைய இருப்பிடம் ஆகும். ஆனால், மணப்பாறையைச் சுற்றி 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்த பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் அமையப் பெறவில்லை. அந்த மணப்பாறையைச் சுற்றியிருக்கின்ற 8 ஊராட்சி ஒன்றியங்கள் மருங்காபுரி, வையம்பட்டி, கடவூர், தோகைமலை, மணப்பாறை போன்ற ஒன்றியங்களைசேர்ந்தச் அத்தனை பெண்கள் வெளியில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

சென்று மேல்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டும் என்றால் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, அதை மனதில் கொண்டு தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ஒரு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை மணப்பாறையில் அமைக்க இந்த ஆண்டில் இல்லை என்றாலும் அடுத்த ஆண்டிலாவது அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையில் சிறுமலர் மகளிர் மேல்நிலைப் பள்ளி என்ற ஒரு பள்ளி பெண்களுக்காகவே தனியாகச் செயல்பட்டு வருகிறது. அது தவிர அரசினர் மேல் நிலைப்பள்ளியும், தியாகேசர் ஆலய மேல்நிலைப்பள்ளியும் ஆண் களும் பெண்களும் சேர்ந்து பயிலுகின்ற மேல்நிலைப் பள்ளிகளாக இயங்கி வருகின்றன. ஆகவே, பெண்களுக்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் சார்பில் மகளிருக்கென தனியாக ஒரு மேல் நிலைப் பள்ளி வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்து கிறார்கள். அப்படி ஒரு மேல்நிலைப் பள்ளி அங்கே வர வேண்டுமானால் அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் பங்குத் தொகை 1 லட்ச ரூபாய் செலுத்த வேண்டும். இதை ஆரம் பிக்கும் முன்னரோ, பின்னரோ கூடச் செலுத்தலாம். சம்பந்தப் பட்ட பள்ளிக்கு 8 கிலோ மீட்டர் சுற்றளவில் வேறு எங்கும் மேல்நிலைப்பள்ளி இருக்கக்கூடாது. இங்கே 3 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. 10-வது வகுப்பில் 60 மாணவர் களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். பள்ளிக்கு வகுப்பறை, ஆய்வகம், விளையாட்டு இடம் இருக்க வேண்டும். பொரு ளாதாரம் மற்றும் சமூக ரீதியில் பின்தங்கியப் பகுதியாக இருப் பின் 2, 3 நிபந்தனைகளைத் தளர்த்தலாம் என்று இருக்கிறது. இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அந்தப் பகுதியில் இருக்கிற பொது மக்கள் அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் போன்ற மக்கள் பிரதிநிதிகள் தக்க நடவடிக்கை எடுத்து அரசை அணுக வேண்டும். அப்போது ஆண்டுதோறும் எவ்வளவு மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தலாம் என்பதை நிதி நிலைமை யைப் பார்த்து அரசு வரையறை செய்கிறது. அந்த வரை யறைக்கு உட்பட்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மணப்பாறையில் கோ-எடுகேஷன் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கின்ற பள்ளி இருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். இருந்தாலும் இந்தக் காலத்தில் உங்க ளுக்கு நன்றாகத் தெரியும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒயுரு கோ-எடுகேஷன் பள்ளியில் 10, 02

பிள்ளைகள் தான் ஒரு வகுப்பறையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். நான் சொன்னது போல் 8 ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற பெண்கள் படிக்க வேண்டியிருக்கின்ற காரணத்தால் அந்த கோ-எடுகேஷன் பள்ளியில் சேர முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் தனியார் மேல்நிலைப் பள்ளிகள் இயங்குவது உண்மை தான், அந்த தனியார் பள்ளியில் தாலுக்காவில் உள்ள பெண்களும். 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பெண்களும் அதிகமாக இருப்பதால் அங்கே நன்கொடை பெறப்படுவதாகச் சொல்கிறார்கள். அந்த நன்கொடையைக் கொடுத்துப் படிக்கிற வசதி இருப்பவர்கள் தான் அங்கே படிக்க முடிகிறது. நன்கொடை கொடுக்க முடியாத பிள்ளைகள் வெளியே சென்று படிக்க முடியாமல் வசதி ஏதுமின்றி மேல்நிலைப் பள்ளியில் படிக்காமல் பெண்கள் அப்படியே இருந்து விடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் அங்கே ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை பெற்று அங்கே இருக்கின்ற, பக்கத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்—3 சட்டமன்ற தொகுதிகள் இடையில் வருகின்றன—அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஏற்பாடு செய்து பங்குத் தொகை கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆக அரசு அடுத்த ஆண்டிலாவது நிதிநிலையை மனதில் கொண்டு கஷ்டம் இருந்தால் கூட அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய கஷ்டத்தை, சிரமத்தை மனதில் கொண்டு தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டும். செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இப்படி என்னை வற்புறுத்த ஆரம்பித்தால் எல்லோருடைய கோரிக்கைகளையும் ஒரு சேர என்னால் நிறைவேற்ற முடியாது என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். நான் ஏற்கனவே சொன்ன பதிலில் என்னுடைய ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினருக்கு சொல்லியிருக்கிறேன். அந்த ஆலோசனைகளைச் சரியாக பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 263, டாக்டர் க. கோபால் இருக்கையில் இல்லை, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

263—

நன்னிலம் தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் வசதி.

*3277—டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :